# ஆன்மீகத் தெளிவு

## ஆன்மீகம் என்றால் என்ன?

ஆன்மீகம் என்பது தன் நிலை உணர்தலும், தனக்குள் இருக்கும் கடவுளைத் தேடுவதாகும். கடவுள் என்பவர் உனக்குள் இருக்கிறார் என்றும், அதை நீ முதலில் தேடு என்கிறார்கள் நமது முன்னோர்கள். ஒருவர் தன்னைத் தேடத்தொடங்கினால்தான், தன் நிலை உணர முடியும் என்றும், தன்னை யார் என்று முழுவதும் அறிந்தபின்புதான் அடுத்த நிலைக்கு செல்ல முடியும் என்கிறார்கள்.

**இதைத்தான் திருமூலர்,**

**"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்சிக்கத் தானிருந்தானே"!!!**

என்கிறார்.

இவ்வுலகில் மனிதனாகப் பிறக்கப் பெற்றவன் முதலில் தன் மனதை அறிந்துதும் பின் தன்னை அறிந்து கொண்டும், தன்னை உணர்ந்தும் பின் இறையை அறிந்தும், இறுதியில் சித்த நிலைக்கு உயராலம் எனறே நமது முன்னோர்கள் கூறுகிறார்கள். மனிதன் இப்பிறவியின் நோக்கத்தினை அறிந்து கொள்ளக்கூடிய பயணம்தான் ஆன்மீகப் பயணமாகும்.

இன்றைய மனிதர்கள் முதலில் தெரிந்து கொள்ளக் கூடிய விஷயம் என்னவென்றால்,

நமக்கு ஏற்றவாறு இந்தப் பிரபஞ்சத்தை மாற்றுவதா?

அல்லது

அந்தப் பிரபஞ்சத்திற்கு ஏற்றவாறு நாம் மாறிக் கொள்வதா?

நாம் அனைவரும் பிரபஞ்சத்திற்கு ஏற்றவாறு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அர்த்தமுள்ள ஆன்மீகத்தை புரிந்து கொள்ள ஒவ்வொரு மனித மனங்களும் ஏங்க வேண்டும்.